பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 64

புதன்கிழமை
29 ஜனவரி 2025

தை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை



## நாமலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை!

கொழும்பு. ஜன. 29
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இலங்கையில் ரக்பி விளையாட்டை அபிவிருத்தி செய் ☞15

குளியலறையில் தவறி வீழ்ந்ததால்

## ஆபத்தான நிலையில் மாவை



யாழ்ப்பாணம், ஜன. 29
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உயிருக்கு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
யாழ்ப்பாணம்-தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள தனது வீட்டில் தவறி விழுந்த அவர், தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் ☞15

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட

# தமிழக மீனவர்களை நேற்று சுட்டுப் பிடித்தது கடற்படை!

இரு மீனவர்கள் படுகாயம்

**யாழ்ப்பாணம், ஜனவரி 29**

**யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திக் கைதுசெய்துள்ளனர். அவர்களில் இருவர் படுகாயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.** ☞15

இலங்கைக்கு எதிராக

## தமிழக மீனவர்கள் போராடுவதற்கு முடிவு

சென்னை, ஜன. 29
இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தையும் இலங்கைக் கடற்படையையும் கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தத் ☞15

மீனவர்கள் மீது சூடு:

## இலங்கைக் கடற்படைக்கு இந்தியா கடும் கண்டனம்!

உருப்பெறுகின்றது தூதரக மோதல்

புதுடெல்லி, ஜன. 29
பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இந்தியா கடும் கண்டனம் ☞15

## சாவகச்சேரியில் மீண்டும் மருத்துவ பெருநெருக்கடி

யாழ்ப்பாணம், ஜன. 29
சாவகச்சேரி மருத்துவமனையில் மீண்டும் மருத்துவ நெருக்கடி உச்சம் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ☞15

## துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் மீனவர்களுடைய ஆக்ரோஷமே!

கடற்படை விளக்கம்

விரிவு :- பக். 15

## யாழ். பல்கலை விவகாரத்தில் அறிக்கை கோரியது அமைச்சு

யாழ்ப்பாணம், ஜன. 29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் துறைசார் அமைச்சால் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ☞15

## உள்ளூராட்சி முன்னே மாகாணசபை பின்னே!

கொழும்பு, ஜன. 29
உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதத்துக்குள் நடத்தப்படும். அந்தத் தேர்தலின் பின்னரே மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என முடிவெடுக்கப் ☞15

## மார்ச் 14, 15இல் கச்சதீவுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 29
கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா மார்ச் மாதம் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.
இது தொடர்பில் ☞15

## ஜனாதிபதி யாழ். வருகை: பட்டதாரிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 29
ஜனாதிபதி அநுரவுக்குத் தமது நிலைமையையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் விதமாக வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனரென அறிவித்துள்ளனர். ☞16



முச்சந்தி முராரி

'சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது. ஆனா உவையள் சூடு பட்டும் வரத்தானே போயினம்'

அரசமாளிகைகளில் இருந்து

## முன்னாள் ஜனாதிபதிகளை விரட்ட வேண்டியும் வரலாம்

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 29
முன்னாள் ஜனாதிபதிகள் தற்போது வசித்துவரும் அரசமாளிகைகளில் இருந்து தாமாக வெளியேறுவது தான் பொருத்தமான நடவடிக்கை. அவ்வாறு இல்லையேல் அவர்களை வெளியேற்றுவதற்கு மாற்றுவழிகள் உள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் ☞15

பிரிட்டன் அமைச்சர்

## கேத்ரின் வெஸ்ட் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 29
இந்தோ - பசுபிக் விவகாரங்களுக்கான பிரிட்டனின் அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ☞16

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதி வருமானம்
# 2030 ஆம் ஆண்டில் 36 பில்லியன் இலக்கு

**கொழும்பு, ஜன. 29**
**புதிய அரசாங்கத்தின் 'வளமான நாடு அழகான வாழ்வு' கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக 2030 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 36 பில்லியன் டொலராக அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.**

2024 ஆம் ஆண்டில் 16.1 பில்லியன் டொலராகக் காணப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை இந்த ஆண்டு 18.2 பில்லியன் டொலராக அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கும் அதேநேரம், புதிய திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டில் வருமானத்தை 36 பில்லியன் டொலராக உயர்த்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு உற்பத்தியைப் பலப்படுத்தி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகரவேண்டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# விற்பனைக்கு வந்தது துருவிய தேங்காய்ப் பூ

கொழும்பு, ஜன. 29
தேங்காய்த் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் துருவிய தேங்காய்ப் பூ விற்பனைக்கு வந்துள்ளது.
தேங்காய் வியாபாரிகள் குறித்த தேங்காய்ப்பூவை பொதி செய்து விற்பனை செய்துவருகின்றனர். தேங்காய்ப்பூப்பொதி ஒன்று 210 ரூபா முதல் தொடக்கம் 250 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.
இந்தத் தேங்காய்ப்பூ பொதியை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22,6)

# மீண்டும் ஆரம்பிக்கப்படும் உள்நாட்டு விமானசேவை

கொழும்பு, ஜன. 29
உள்நாட்டு விமானசேவைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.
அத்துடன் சுற்றுலாப்பயணிகளின் வருகை தற்போது கணிசமானளவு அதிகரித்து வரும் நிலையில், விமானநிலையங்களில் வசதிகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.
அதற்கமைய, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 20 புதிய பதிவுக் கருமபீடங்களை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மஹிந்தவுக்கு பாதுகாப்பு அவசியமே

கொழும்பு,ஜன.29
போரை முடிப்பதற்கு அரசியல் ரீதியில் தலைமைத்துவம் வழங்கியதால் மஹிந்த ராஜபக்சவுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இன்றளவிலும் உள்ளது. எனவே, அவருக்கான பாதுகாப்பு நிச்சயம் வழங்கப்படவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோர் போர்க்காலத்தில் தான் நாட்டை ஆண்டனர். மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதனால் அவர் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லமுடியாது.
மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்காவிட்டால் உக்ரைனைப் போன்று இங்கு ட்ரோன் தாக்குதல்கள்தான் நடந்திருக்கும்.
அரசியல் ரீதியில் மஹிந்த தொடர்பில் விமர்சனங்கள் இருந்தாலும், அவர் மீது மதிப்பு உள்ளது. அவருக்கான பாதுகாப்பு மற்றும் வீடு என்பன வழங்கப்படவேண்டும்- என்றார். (ச-44)

# புலியோடு மோதியவர்கள் சவால்களுக்கு அஞ்சார்!



கொழும்பு,ஜன.29
சவால்களைக் கண்டு அஞ்சுபவர்கள் ராஜபக்சக்கள் அல்லர். அவ்வாறு அஞ்சுபவர்களாக இருந்திருந்தால் புலிகளுடன் மோதி இருக்கமாட்டோம் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அடக்குமுறை மூலம் மட்டுமே அரசியல் செய்யமுடியும் என தேசிய மக்கள் சக்தி கருதுகின்றது. ஒடுக்குமுறையை எதிர்கொள்வதற்கு நாம் தயார். எம்மை பழிவாங்கினால் பரவாயில்லை, ஆனால் எமது ஆதரவாளர்களை பழிவாங்கல்களுக்கு உட்படுத்தவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ரணில் பக்கம் தாவியோர் மீண்டும் பெரமுனவுக்கு

கொழும்பு,ஜன.29
2024 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்சவைக் கைவிட்டு, ரணில் விக்கிரமசிங்கவுடன் சங்கமித்த மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் பலர், மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
மஹிந்த ராஜபக்சவின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற மொட்டுக்கட்சியின் முன்னாள் எம்.பிக்கள், எந்தப் பிரச்சினை வந்தாலும் அவருக்குப் பக்கபலமாக நிற்பதாக உறுதியளித்துள்ளனர். (ச-44)

**சுபிரி தன சம்பத** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம்: 0438
ஆங்கில எழுத்து: U | வெற்றி இலக்கம்: 0 8 7 8 4 1

**Super Ball** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2704 | ஆங்கில எழுத்து: T | வெற்றி இலக்கம்: 08 13 29 64

**சனிதா** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கம்: 23 27 63 64 | வெற்றி வாரம்: 4865

**SASIRI** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 0610 | வெற்றி இலக்கம்: 07 13 19

**லக்ன ராசி**
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம்: 04 09 44 53 | சீட்டிழுப்பு வாரம்: 4416
DLB

**KAPRUKA** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: X | சுப்பர் இலக்கம்: 20 | வெற்றி இலக்கம்: 02 04 11 43 | வெற்றி வாரம்: 1880

**அத கோடிபதி** DLB
திகதி: 28.01.2025 | தினம்: செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து: R | வெற்றி இலக்கம்: 04 22 40 52 | வெற்றி வாரம்: 2530

# உள்ளாட்சித் தேர்தலின் பின்னரும் இணைவுப் பேச்சுகள் தொடரும்!

## ஐ.ம.சக்தி கூறுகின்றது

கொழும்பு, ஜன.29
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைவதற்குரிய முயற்சி உள்ளாட்சிச்சபைத் தேர்தலுக்கு முன்னதாகக் கைகூடாவிட்டாலும், இணைவுக்குரிய பேச்சுகள் தொடரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஒன்றாக இணைந்து செயற்படுவதற்குரிய பேச்சுகளே இடம்பெறுகின்றன. ஓரிரு நாள்களுக்குள் அதற்குரிய வரைவுத் திட்டம் உருவாக்கப்படும். இணைவு என்பது தாமதானால்கூட உள்ளாட்சிச்சபைத் தேர்தலுக்குபின்னரும் அது தொடரும். இந்த முயற்சி [illegible] (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தாண்டில்

# சிறுவர் துஷ்பிரயோகம்; 8,746 முறைப்பாடுகள்

கொழும்பு,ஜன.29

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக கடந்த ஆண்டில் 8,746 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த காலப்பகுதியில், பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக 321 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சிறுவர்கள் மீதான சித்திரவதை தொடர்பாக 1,950 முறைப்பாடுகளும், சிறுவர்கள் யாசகம் பெறுவது தொடர்பாக 229 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. பாலியல் வன்கொடுமை தொடர்பாக 42 முறைப்பாடுகளும், பாலியல் செயல்களுக்கு சிறுவர்களைத் தூண்டுவது தொடர்பாக 25 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

அத்துடன் குழந்தைத் திருமணங்கள் தொடர்பாக 14 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன, மேலும் நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தளத்தில் வெளியிடுவதான மிரட்டல்கள் தொடர்பாக 151 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2024 ஆம் ஆண்டில் தற்கொலை முயற்சி தொடர்பாக 18 முறைப்பாடுகளும், போதைப்பொருள் பழக்கம் தொடர்பாக 120 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

வயது குறைந்த கர்ப்பங்கள் தொடர்பாக 53 முறைப்பாடுகளும், பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்கள் தொடர்பாக 39 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## நெல்கொள்வனவு மோசடி கிளிநொச்சியில் சோதனை

கிளிநொச்சி, ஜன. 29

நெல் கொள்வனவில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் அளவீட்டு அலகுகள் திணைக்களத்தால் சோதனை நடவடிக்கைகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி- வட்டக்கச்சி சந்தைப்பகுதி மற்றும் பரந்தன், கண்டாவளை போன்ற பகுதிகளில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதில் உரியகாலத்தில் முத்திரையிடப்படாத மற்றும் அரச அனுமதியற்ற தராசுகள் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன. (ச-25, 113)

## சிவப்பு அரிசியில் மோசடி; வெள்ளை அரிசி கலப்பு

கொழும்பு, ஜன. 29

சிவப்பு அரிசிக்கு சந்தையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் வெள்ளை அரிசியை சிவப்பு அரிசியுடன் கலக்கும் மோசடிகள் இடம்பெற்று வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளன. நாட்டில் கடந்த சில வாரங்களாக அரிசிக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அரிசிப் பற்றாக்குறையைப் போக்க இந்தியாவில் இருந்தும் ஒரு இலட்சத்தி 50ஆயிரத்துக்கும் அதிகமான மெற்றிக்தொன் அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. எனினும் நாட்டில் சிவப்பு அரிசிக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில கறுப்புச் சந்தை அரிசி விற்பனையாளர்கள் வெள்ளை அரிசியுடன் சிவப்பு அரிசியை குறிப்பிட்ட வீதம் கலந்து சிவப்பு அரிசியாக விற்பனை செய்கின்றனர். இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து சில சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ச-இ)



## அரிசியின் நிர்ணயவிலை நீங்காது

கொழும்பு, ஜன. 29

அரிசிக்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டு விலையை நீக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச-இ)

## பிரியங்க ஜெயரட்ன மீது மூன்று வழக்குகள்

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் முன்னாள் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜெயரட்னவுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முதலாவது வழக்கில் 3 ஆயிரம் வெசாக் வாழ்த்துமடல்கள் அச்சிடுவதற்கு 1 லட்சத்து 28 ஆயிரத்து 520 ரூபாய் செலவிடப்பட்டுள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இரண்டாவது வழக்கில் தனியார் நிறுவனமொன்றுக்கு 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா வழங்கினார் எனவும் மூன்றாவது வழக்கில் தேசிய சேமிப்பு வங்கியின் சிலாபக் கிளைக்கு 4 லட்சத்து 94 ஆயிரம் ரூபாவை மாற்றி அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தினார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ச-22,6)

## பேரீச்சம்பழம் பண்டவரி குறைப்பு

கொழும்பு, ஜன. 29

பேரீச்சம்பழத்தின் மீதான விசேட பண்ட வரியைக் குறைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, பேரீச்சம்பழத்தின் மீதான தற்போதைய விசேட பண்ட வரியான 200 ரூபாவை 2025 மார்ச் 31 வரை கிலோவுக்கு ஒரு ரூபாவாகக் குறைத்து குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.





நாயைத் தூக்கில போடுவானேன், மறியலுக்குப் போவானேன் எண்டமாதிரி ஒரு சம்பவத்தைப் பற்றித்தான் இப்ப வன்னிப்பக்கத்தில எல்லாரும் கதைக்கினம். மாங்குளத்தில இருக்கிற மன்னவகுளத்திலதான் இப்பிடியொரு பாதகச் சம்பவம் நடந்திருக்கு. அங்க ஒராள் நாயொண்டை 'மதி' எண்டு பேர் வைச்சு தன்ர பிள்ளை மாதிரி வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறா. அந்தநாயும் வீட்டு வளவுக்கு கள்ளர், காடரை வரவிடாமல் கடும்காவல் காத்திருக்குது. இப்பிடியிருக்கேக்க கிட்டடியில பக்கத்து வீட்டு ஆடொண்டு செத்துப்போய் கிடந்திருக்குது. அந்த ஆட்டில கடிகாயமும் இருந்ததால, இந்த நாய்தான் கடிச்சு தன்ர ஆடு செத்திட்டுதெண்டு பக்கத்துவீட்டுக்காரி எல்லாருக்கும் சொல்லிப் புலம்பியிருக்கிறா. அதோட 'என்ர ஆட்டைக் கடிச்சுக் கொண்ட உந்தநாயை நான் கொல்லாமல் விடமாட்டன்' எண்டும் சபதம்போட்டிருக்கிறா. சரி, ஏதோ ஆடுசெத்த கவலையில அப்பிடிச் சொல்லுறா எண்டுதான் எல்லாரும் நினைச்சவை.

ஆனால் அந்த மனுசி அதோட விடேலை. உடனேயே இணக்கசபைக்கு இந்த விசயத்தைக் கொண்டு போயிருக்கிறா. இணக்கசபையில இருந்தவை இந்த வழக்கை விசாரிச்சுப்போட்டு, 'ஆட்டுக்குரிய காசை குடுங்கோ' எண்டு நாயை வளர்த்தவாவிட்ட சொல்லியிருக்கினம். ஆனால் அவாவிட்ட அவ்வளவு காசில்லை. அதால 'என்னட்ட அந்தளவு வசதியில்லை'எண்டு சொல்லியிருக்கிறா. அதுக்குப்பிறகுதான் அந்த இணக்கசபைக்கார் , ஆட்டுக்காரியிட்ட கேட்டிட்டு ஒரு விநோதமான தீர்ப்பைச் சொல்லியிருக்கினம். 'ஆட்டுக்குப் பதிலா நீங்கள் வளர்க்கிற நாயைக் குடுங்கோ'எண்டதுதான் அந்தத் தீர்ப்பு. அது பெரிய விசயமில்லைத்தானே. பக்கத்துவீட்டில நிக்கிற நாய், வேலிக்கால பூந்து தன்ர வீட்டைதானே எப்பவும் வருமெண்டிட்டு, இவாவும் ஓமெண்டு சம்மதிச்சு, நாயை பக்கத்து வீட்டுக்காரியிட்ட ஒப்படைச்சிருக்கிறா. அந்தநாயும் வாலாட்டிக்கொண்டு அங்க போயிருக்கு. ஆனால் பிறகுதான் அந்த நாயை கழுத்தில கயித்தைப் போட்டு தொங்கவைச்சு சாக்கொண்டு போட்டு, அதைப் படமெடுத்து பேஸ்புக்கிலையும் போட்டிருக்கிறா அந்த ஈவிரக்கமில்லாத பக்கத்துவீட்டுக்காரி. நாயைத் தொங்கவிட்டதோட பேசாமல் இருந்தால் கூட விசயம் வெளியில வந்திருக்காது. ஆனால் அவான்ர கெடு காலம், தான் சொன்னமாதிரி நாயைச் சாக்காட்டிப் போட்டன் எண்டு எல்லாருக்கும் காட்டுறதுக்காக பேஸ்புக்கில படத்தைப் போட, எல்லாரும் அவாக்கு எதிராவும் இணக்கசபைக்கு எதிராவும் பொங்கி எழும்பிட்டினம். இப்ப நாயைக் கொலை செய்தவாவை விளக்கமறியலில போட்டிருக்கினம்.

உண்மையில இந்த நாயின்ர சாவுக்கு முதல் காரணம், இணக்கசபைக்காரர் தான். நாயை வளர்த்தவா தன்னட்ட ஆட்டுக்கு நட்டஈடு தரக் காசில்லை எண்டவுடனேயே இந்த வழக்கை அவையள் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியிருக்கவேணும். அதைவிட்டிட்டு தாங்கள் ஏதோ பெரிய நாட்டாமைக் கணக்கில இப்பிடி ஆட்டுக்குப் பதிலா நாயைக் குடுக்கலாமெண்டு தீர்ப்பைச் சொல்லி அந்த நாயை அநியாயமாச் சாகடிச்சதுதான் மிச்சம். இப்பிடி தங்கட பவர் எதுவரை எண்டு தெரியாதவையெல்லாம் எப்பிடி இணக்கசபையில போட்டிருக்கினமோ தெரியேலை. அடுத்த குற்றவாளிதான், நாயைச் சாகடிச்ச பொம்பிளை. மனிசரைக் கொலை செய்தால் மட்டும்தான் குற்றமெண்டு அவா நினைச்சாவோ தெரியேலை. ஆனால் எல்லாமே உயிர்தான் எண்டாவது அவாக்கு தெரிஞ்சிருக்கும் தானே. தனக்குப் பின்னால குழந்தை மாதிரி வாலாட்டிக்கொண்டுவந்த நாயைத் தூக்கில போட எப்பிடித்தான் மனம் வந்திச்சோ? அதால இப்ப மறியலுக்க கிடந்து அவதிப்படுறதும் அவாதானே.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ராசிபலன்

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற் படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற் படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறை வேற்ற முயற்சி செய்யவும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்ப டக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்ப டக்கூடும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம் :** உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்து வம் கிடைக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக் கும்.

**தனுசு:** உற்சாகமான நாளாக இருக்கும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** மகிழ்ச்சியும் உற்சாகமுமான நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

# இரு வயோதிபர்கள் கஞ்சாவுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜன.29

மாதகல் நுணசை மற்றும் பனிப்புலம் ஆகிய பகுதிகளில் இரு வயோதிபர்கள் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுணசைப் பகுதியில் 1 கிலோகிராம் கஞ்சாவுடன் 60 வயதான ஒருவரையும் பனிப்புலம் பகுதியில் 850 மில்லிகிராம் கஞ்சாவுடன் 65 வயதான ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-22, 125)

## மீண்டும் வெள்ளை ஈ தாக்கம்!

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணத்தில் பரவலாகத் தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் மீண்டும் பரவிவருகிறது.

கடந்த ஆண்டில் இந்த வெள்ளை ஈக்களின் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்டநிலையில் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தற்போது மீண்டும் தென்னைகளில் அவற்றின் தாக்கம் அதிகரித்துப் பரவுவதாகத் தென்னஞ்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை விரைந்து தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-33-17)

## மரக்கறி விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ். குடாநாட்டில் கடந்த வாரத்தைவிட இந்த வாரத்தில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமையே விலை அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கத்தரிக்காய் 1 கிலோ 480 ரூபாவுக்கும், பயிற்றங்காய் கிலோ 550 ரூபாவுக்கும், பாகற்காய் கிலோ 600 ரூபாவுக்கும், தக்காளிப்பழம் கிலோ 400 ரூபாவுக்கும், மரவள்ளிக் கிழங்கு கிலோ 280 ரூபாவுக்கும், பச்சைமிளகாய் கிலோ 1200 ரூபாவுக்கும், பீற்றூட் கிலோ 600 ரூபாவுக்கும், பூசணிக்காய் கிலோ 150 ரூபாவுக்கும், கீரை ஒரு பிடி 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-33-17)

## அபிராமிப்பட்டர் விழா இன்று

யாழ்ப்பாணம் , ஜன 29

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று புதன்கிழமை அபிராமிப் பட்டர் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை 3 மணியளவில் பூஜைகள் ஆரம்பமாகி 3.30 மணியளவில் அம்மனின் புகழைப் பாடும் அபிராமி அந்தாதி பாடப்படும். தொடர்ந்து 4.30 மணிக்கு விசேட அபிஷேகமும், வசந்த மண்டபப்பூஜையும்இம்பெற்று அபிராமிப்பட்டருடன் துர்க்கா தேவி உள்வீதி எழுந்தருளி உலா வருவார். (ச-22,66)

✦✦✦✦

யாழ்ப்பாணம் , ஜன 29

கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அபிராமி பட்டர் விழா இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு ஆலய ஆதீனகர்த்தா நகுல ஈஸ்வரராஜ உம்பதீஸ்வரக்குருக்கள் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-25,6)

## யாக பூஜை

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். தெல்லிப்பழை வீதி வட்டுக்கோட்டை பிரத்யங்கிரா சக்தி படத்தில் பிரதி அமாவாசை தோறும் ஸ்ரீ மஹா நிகும்பலா யாகம் நடைபெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியாக மிளகாய் வற்றல் யாக பூஜை இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25, 63)



## பொன்.சுந்தரலிங்கத்துக்கு கலாசாலையில் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

கனடாவிலிருந்து வருகைதந்துள்ள ஈழத்தின் முன்னணிப் பாடகர் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்துக்குக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கலாசாலைச் சமூகத்தின் சார்பாகப் பொன்.சுந்தரலிங்கத்துக்கு கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் சிறப்புக் கௌரவம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கலாசாலையில் முதலாவது இசையாசிரியர் அணியில் பயிற்சிபெற்ற தனது அனுபவங்களைப் பொன்.சுந்தரலிங்கம் எடுத்துக்கூறினார். அத்துடன் கலாசாலையை வாழ்த்திப் பாடல் ஒன்றையும் இயற்றிப் பாடினார். (ச-25,66)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதமகுருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து, தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதனும், சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்கபூஷணம் க.கைலைநாதன் "திருவவதாரப் படலம்" என்ற விடயப்பொருளிலும் ஆற்றவுள்ளனர்.

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புகளின்றி வடக்கில் இளைஞர்கள்!

## நியூஸிலாந்துத் தூதுவரிடம் ஆளுநர் எடுத்துரைப்பு



கொழும்பு,ஜன.29

**போருக்கு முன்னர் இங்கு பல தொழிற்சாலைகள் இயங்கிய நிலையில் அதனூடாகப் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்த நிலையில் தற்போது அவை இயங்காதுள்ளதால் இளையோர் வேலைவாய்ப்பில்லாது சிரமப்படுகின்றனர். அத்துடன் வடக்கில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையும் தலைதூக்கியுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநருக்கும், நியூஸிலாந்துத் தூதுவர் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இதன்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார மேம்பாடு தொடர்பிலும் குறிப்பாக சுற்றுலாத்துறை தொடர்பிலும் வடக்கு மாகாண ஆளுநரிடம், தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடு தொடர்பாகவும் அதன் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் விரிவாக ஆளுநர் விளக்கமளித்தார்.

அதேவேளை கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவைகளை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துவது தொடர்பிலும், நியூஸிலாந்துத் தூதுவருக்குத் தெரியப்படுத்தினார்.


பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் விளிம்புநிலையில் உள்ள மக்கள் குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன எனவும், ஒருவேளை உணவுடன் அவர்கள் தமது அன்றாட உணவு உட்கொள்ளலை நிறுத்திக்கொள்கின்றனர் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கில் அதிகரித்துள்ள உயிர்கொல்லிபோதைப் பொருள் பாவனை மற்றும் அதனது தாக்கங்கள் தொடர்பிலும் நியூஸிலாந்துத் தூதுவர் கேட்டறிந்துகொண்டார்.

இளையோருக்கான பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் இதன்போது ஆளுநர் சுட்டிக்காட்டினார். (ச-27)

# ஈழத்தமிழர்களின் தீர்வு; இந்தியா தலையிடுங்கள்

## நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்து



யாழ்ப்பாணம்,ஜன.29

ஈழத்தமிழர்களின் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தரவேண்டுமென யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியிடம் நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நல்லை ஆதீனத்தில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளியுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்தியா தீர்த்துவைக்கவேண்டும் என்றும் புதிய அரசியலமைப்பு விவகாரம் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்னோக்கி எவ்வாறு நகரவேண்டும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச-125)



# மரமுந்திரிகை பதனிடல் ஜெயபுரத்தில் நிலையம்

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்ட செயலக மற்றும் பூநகரிப் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில், கிளிநொச்சி ஜெயபுரம் கிராம அலுவலர் பிரிவில் மரமுந்திரிகை பதனிடல் நிலையம் கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் அனுசரணையுடன் இந்த நிலையம் திறக்கப்பட்டுள்ளது. (ச-25,113)



# சிலுவையிலிருந்து கசிந்த நீர்!

யாழ்ப்பாணம், ஜன. 29

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியில் காணப்படும் ஆண்டவரின் சிலுவையிலி ருந்து நேற்று நீர் கசிந்துள்ளது.

மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக ஆண்டவர் சிலுவையின் விரல் பகுதியில் நீர்க் கசிவு ஏற்பட்ட நிலையில் சம்பவம் அறிந்து அங்கு வருகைதந்த அதிகளவான பக்தர்கள் அதனைப் பார்வையிட்டுச் சென்றனர். (ச-27)




# யாழ். இந்து மாணவர்களின் 'த வேடார்க்கட் லொக்ட்' குறும்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் கல்லூரி ஒளிப்படக்கலைக் கழகத்தினர் ஆகியோரின் இயக்கம் மற்றும் படப்பிடிப்பில் உருவான 'த வேடார்க்கட் லொக்ட்' என்ற குறும்படம் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் அண்மையில் வெளியிட்டுவைக்கப்பட்டது.


பாடசாலை அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைபீடத் தலைவருமான பேராசிரியர் பா.அகிலன், சிறப்பு விருந்தினர்களாக ஈழத்து திரைப்பட இயக்குநர் ராஜ் சிவராஜ், காணொளிப் புகைப்படக் கலைஞர் ஏ.கே.கமல், இசையமைப்பாளர் பூ.மதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உயிர்மாய்ப்புகளைத் தடுக்கும் உளவளத்துணைக்கு உதவும் முகமாக மாணவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் இந்தக் குறும்படம் வெளிவந்துள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் செல்லத்துரை பரமேஸ்வரன்



தோற்றம் 06.04.1939 — மறைவு 30.12.2024

கடந்த (30.12.2024) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் செல்லத்துரை பரமேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.01.2025) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

102 பொற்பதி வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்
021 221 2113

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 07 . 1932 — மறைவு 26 . 01 . 2025

## நாகமுத்து கனகம்மா

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கனகம்மா கடந்த 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குஞ்சர் - பொன்னு தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற முருகர் நாகமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, குணரட்ணம் மற்றும் மல்லிகாதேவி, இராஜேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கனகம்மா மற்றும் செல்லத்தம்பி, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தெய்வேந்திரன், தங்கராஜா (சந்திரன்), காலஞ்சென்ற அருந்தவம் மற்றும் மகேந்திரன் (மர அரிவுப்பட்டறை உரிமையாளர்), காலஞ்சென்ற சற்குணபாலன் மற்றும் வயிந்தவராசா (ராசா), செல்வராசா (பாலன் - London), ஆகியோரின் அன்புத் தாயாரும், குணவதி, காலஞ்சென்றவர்களான சுகுணா, செல்வரத்தினம் மற்றும் அருந்ததி, கலைவாணி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜேந்திரன், வாகீசன், திவாகரன், இந்துஜா, அஜித், நிருஷன், தனுப்பிரியா, சிலோசன், சித்திரப்பிரியா, சுயிந்தன், தர்மிக்கா, அஷ்சயா, டிதுசன், சௌமியா, ஜெஸ்வினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/ 09, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்
077 617 6413
0044 74770 28762 (London)

(cs.573349) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 05 . 1937 — மறைவு 28 . 01 . 2025

## திரு நாகலிங்கம் இராசரத்தினம்

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசரத்தினம் அவர்கள் நேற்று (28.01.2025) செவ்வாய்க் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவடி வடக்கு நாகலிங்கம் (ராசா)-நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான கல்வயல் சங்கரப்பிள்ளை-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் கனகம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னராசா, கனகராசா மற்றும் அருணகிரி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் (கல்வயல்), தங்கலட்சுமி, லோகேஸ்வரி, மற்றும் சிவானந்தன், மகேஸ்வரி, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் நித்தியானந்தன் (ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்), தயாசீலன் (Australia), கேமலதா (வவா), றஞ்சினி (பிரதேச செயலகம்-உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனும் ரோகினியின் (ஆசிரியை) சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.01.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவாஸ் ஐஸ்கிறீம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
நந்தாவில்.

தகவல் :
சின்னராசா நித்தியானந்தன்
(மருமகன்)

# மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 06 . 1937 — இறப்பு 27 . 01 . 2025

## திரு ஞானப்பிரகாசம் றொபேட் இராஜசிங்கம்

(மாநகரசபை முன்னாள் லிகிதர், முன்னாள் G.T.Z திட்டமிடல் முகாமையாளர்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ் பிரதான வீதியை வதிவிடமாகவும் கொண்ட G.R.இராஜசிங்கம் நேற்றுமுன்தினம் (27.01.2025) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-ஆரோக்கியம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற ஜோசப்பின் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சோதிமலர் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் கரோலின் சுமதியின் அன்புத் தகப்பனும் உமாசங்கரின் அன்பு மாமாவும் மயூரன், அர்ச்சுன் ஆகியோரின் அருமை தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (29.01.2025) புதன்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

368/3B பிரதான வீதி
யாழ்ப்பாணம்

(CS 2397) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

## பணிநீக்கம்!

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு எதிராக இரண்டு குற்றவியல் வழக்குகளில் பணியாற்றிய சட்டத்தரணிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கு கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ட்ரம்ப் அரசியல் பழி வாங்கலில் ஈடுபட்டுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ம)

## எதிர்ப்பு

உலக சுகாதார நிறுவனத்தின் ஆசிய பிராந்திய இயக்குநராக இருக்கும் ஷேக் ஹசீனாவின் மகளை, அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கும்படி பங்களாதேஷ் அரசு வலியுறுத்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கைக்காகப் போராடுகிறோம்;
போராட்டத்தில் வாழ்கிறோம்.

– லெனின் –

## காணாமலாக்கப்பட்டோருக்காக
# கைகோர்ப்போம்

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்றும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். இந்தப் போராட்டங்கள் ஒரு தசாப்தத்தையும் கடந்து தொடர்கின்றபோதும்- பல அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்து சென்றுள்ளபோதும் , வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற மர்மம் நீடித்துக் கொண்டே இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் இன்றும் தேடல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்திலும், அதன் பின்னரான காலப்பகுதியிலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். இலங்கையின் பலபாகங்களில் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருந்தாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இறுதிப்போரின் போது உறவினர்களால் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பலருக்கு என்ன நடந்தது என்பது தற்போதுவரையில் மூடிமறைக்கப்பட்டே வருகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியான சுழற்சிமுறைப் போராட்டங்களை ஆயிரக்கணக்கான நாள்களாக வீதியோரங்களில் முன்னெடுத்துவருகின்றபோதும், அவர்களுக்கான நீதி இன்றுவரை மறுக்கப்பட்டிருக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசாங்கங்களால் பல கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டபோதும், அவை வெறுமனே கண்துடைப்புச் செயற்பாடுகளாவே இருந்தன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் நிறுவப்பட்டபோதும், அந்த அலுவலகம் இழப்பீடுகளை வழங்கி இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க முயன்றதே தவிர, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை ஆராயவோ அல்லது இந்த விடயத்தில் குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கான வழிகளைக் கண்டறியவோ முயலவில்லை. நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு அரசாங்கங்கள் உருவாக்கிய கட்டமைப்புகள் எதுவும் இழப்பீட்டைத் தவிர எதையும் வழங்கத் தயராகவிருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவது அவசியம் என்கின்றபோதும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு விடைதேடுவது அதிமுக்கியமானது. தங்கள் கைகளால் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்வியுடனும், தங்கள் உறவுகள் உயிரோடு எங்காவது இருக்கக்கூடுமா? என்ற எதிர்பார்ப்பிலும், நித்தமும் தவித்துக்கொண்டிருப்பவர்களை ஆற்றுப்படுத்துவதற்கு, அவர்களின் கேள்விக்குரிய விடையைக் கண்டறியவேண்டும். இந்த விடையைக் கண்டறிவது அல்லது கண்டறிவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பொறுப்பு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் பொறுப்பு என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது. ஆனால் இப்போது தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கின்றனர் என்பதே வேதனையான உண்மை.

அபிவிருத்தி, ஊழலுக்கு எதிரான முன்னெடுப்பு என்ற சலசலப்புகளால் தமிழ் அரசியல் பரப்பிலும் சரி, தமிழ் மக்களின் வாழ்வியல் முறைமையிலும் சரி தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன கடந்தகாலங்களை விடவும் இப்போது தளர்ந்துவிட்டன. இது தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் இனத்தின் பிரச்சினைகளை முன்னிறுத்திச் செயற்படாமல், தங்கள் நலன்சார்ந்தவற்றையே முன்னிறுத்திச் செயற்படும் இந்த நிலைமைக்கு ஒரு பிரதான காரணமாகவும் மாறியிருகின்றது. தமிழ் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம், தமிழ் இனத்தின் எதிர்கால இருப்பில் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதுடன், நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முதல் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், தமிழர்பிரதேசங்களில் திட்டமிட்டு இனப்பரம்பலை மாற்றும் திட்டங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளமுடியாத நிலைமையைத் தோற்றுவிக்கும்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே அவர்களைத் தேடியலைந்த பலர் உலகைவிட்டு நீங்கியிருக்கின்றனர். எஞ்சியிருப்போர் தங்களின் வாழ்க்கைக் காலத்தில் தங்கள் உறவுகளைக் கண்டறிந்துவிட மாட்டோமா என்ற ஏக்கத்துடன், இயலுமையை மீறி போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்தப் போராட்டம் அவர்களுக்கு மட்டுமானது என்று ஒதுங்கியிருக்காமல், தமிழ் அரசியல் தலைமைகளும், மக்களும் அவர்களுக்குக் கைகொடுக்கவேண்டியது அவசியம். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மட்டுமல்ல, தமிழ் இனம் சார்ந்த ஏனைய விடயங்களிலும் பேதங்களை ஒதுக்கிவிட்டுக் கைகோர்க்கவேண்டியது அனைவரினதும் முன்னுள்ள கடமை என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி இருட்டில் அலைந்துகொண்டிருக்கும் உறவுகள், இலங்கையின் சுதந்திரநாளைக் கரிநாளாக அறிவித்து, தங்களின் எதிர்ப்பைப் பதிவுசெய்யவிருக்கின்றனர். அவர்களுடன் கைகோர்ப்பதன் - அவர்களுக்கு ஆதரவளிப்பதன் அவசியத்தை அனைவரும் புரிந்து செயற்படவேண்டும்.



# யாழ்ப்பாணம் உட்பட 6 நகரங்களில் காற்றுமாசு



**கொழும்பு, ஜன. 29**
**இலங்கையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 6 நகரங்களில் காற்றின் தரநிலை சற்று மோசமான நிலையை எட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதன்படி யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, காலி, அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே காற்றின்தரம்வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.
காற்றின் தரக் குறியீடு (SL AQI) 0 முதல் 50 வரை இருந்தால் நல்லது என்றும், 51 முதல் 100 வரை இருந்தால் மிதமானது என்றும் கருதப்படுகிறது. காற்றின் தரம் குறைவதால், உடல்நலப் பிரச்சினைகள் உள்ள நபர்கள், குறிப்பாக காற்றுமாசுபாட்டினால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால், மருத்துவ உதவியை நாடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# மலையக மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு

கொழும்பு, ஜன. 29
மலையக மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் நவீன அடுக்குமாடிக் குடியிருப்பு அமைக்கப்படவுள்ளதாகப் பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்தா வித்யாரத்ன தெரிவித்துள்ளார். இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் வழிபாட்டுத்தலங்கள், கூட்டுறவு விற்பனை நிலையங்கள், முன்பள்ளிகள் என்பன அமைந்திருக்கும். இதன்மூலம் மலையக மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதுடன் மண்சரிவு அபாயத்திலிருந்தும் மக்களைப் பாதுகாக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22.6)

# சொகுசு வாகனங்கள் கைவிட்டநிலையில் மீட்பு

கொழும்பு, ஜன. 29
சரஸ்வதி மந்திரி கட்டடத் தொகுதியிலிருந்து கைவிடப்பட்ட சொகுசு வாகனங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட வாகனங்களிலிருந்து பிரதான உதிரிப்பாகங்கள் காணாமல் போயுள்ளன. இந்தக் கட்டடம் முன்பு நாடாளுமன்றப் பாவனையிலிருந்து பின்னர் மேல் மாகாணசபையின் பாவனைக்கு மாற்றப்பட்டது.
இந்த நிலையில் கடந்தகால ஆட்சியாளர்கள் இந்தக் கட்டடத் தொகுதியிலிருந்து பத்ரமுல்லைக்கு மாறியபோது கைவிட்டுச்சென்ற வாகனங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-22-6)

# விமானப்படைக்கு புதிய தளபதி



யாழ்ப்பாணம்,ஜன.29
இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக ஏர் வைஸ் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த நியமனம் இன்று 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.
தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# 30,000 வேலைவாய்ப்புகள்

கொழும்பு, ஜன. 29
இலங்கை அரச சேவையில் 30,000 அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்பப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பான நிதியொதுக்கீட்டுக்கான முன்மொழிவுகளை இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சமர்ப்பிப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




நாளை 30.01.2025
வியாழக்கிழமை - தை - 17
சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர் கோபாலபிள்ளை தெய்வேந்திரன்

**(வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் புங்குடுதீவு-12)**



வேலணை 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு கிழக்கு 12ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை தெய்வேந்திரன் 2025.01.28 அன்று செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வேலணை காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை செல்லம்மாவின் அன்பு மகனும், புங்குடுதீவு காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் செல்லம்மாவின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் ஆவார். வேழவேந்தன் (அஞ்சல் அதிபர், அளவெட்டி), தனவேந்தன் (அமெரிக்கா), நாகதர்சினி (சம்பத்வங்கி, பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ரதீஸ்வரி, சாரா (அமெரிக்கா), பிரதீப் (முகாமையாளர், DFCC வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதந்திரபாலன், மகேந்திரன், பாலேந்திரன் (அமரர்), இராஜேந்திரன், புவனேந்திரன் தவமணி, விமலேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரரும் செல்லத்துரை, ராசலஷ்மி காலஞ்சென்ற ஓங்காரநாதன் மற்றும் நாகராசா, சண்முகராசா, அருளானந்தம், சிவலிங்கம், கேதீஸ்வரி, காலஞ்சென்ற தெய்வேந்திரராணி மற்றும் சாந்தா, காலஞ்சென்ற குகனேஸ்வரி மற்றும் பாலச்சந்திரன், நிஷந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிஷன், விபிஷன், மகிஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பிறப்பு** 12.05.1952 **இறப்பு** 28.01.2025

**இல 29/5, றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்**
**077 936 1390, 077 384 9095** (CS 2401) V-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## யேசுதாசன் றீற்றம்மா (மாணிக்கம்)



மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுதாசன் றீற்றம்மா (மாணிக்கம்) அவர்கள் கடந்த 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரி - வரவணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், பர்ணாந்து - மரியம்மா தம்பதியரின் மருமகளும், யேசுதாசன் (முன்னாள் ப.நோ.கூ.சங்க முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து தேவ ராசா (அதிபர்), பெர்னபெற்றம்மா, செலஸ்ரீனுப்பிள்ளை, பேனாட் மற்றும் சிப்பிரியாள் (சுவீடன்), காலஞ்சென்றவர்களான லில்லிமாகிறேற், றெஜினா மற்றும் எட்மன், காலஞ்சென்ற யோசப் ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றுபினா மேரி (யஷோ - லண்டன்), டணஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யேசுநேசன் (ஈசன்) - லண்டன்), சகுந்தலா (வினோதா- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லதீஷா (லண்டன்), திஷாலி (லண்டன்), விகாஷன் (பிரான்ஸ்), கிருத்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற யேசுநாயகம், மேரிஸ்ரெலா (றஞ்சிதம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலியானது நாளை (30.01. 2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மண்ணில்** 15.05.1946 **விண்ணில்** 26.01.2025

தொடர்புகளுக்கு:
யஷோ - 00447365288199
ஈஷன் - 00447585009178
டயானா - 077 195 9206

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 2399) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
29.01.2025
புதன்கிழமை

நம்முடைய மிகப்பெரிய பெருமை விழாமல் இருப்பதில் இல்லை, ஒவ்வொரு முறை விழும்போதும் எழுவதில் இருக்கின்றது.

- கன்பூசியஸ்

# ஈழ, தமிழக வணிகத்தை பறைசாற்றும் கல்வெட்டுகள்



எ.கிறேஷா மிலாணி,
தமிழ் முதுகலை மாணவி,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

வணிக குலங்கள் எனப்படுபவை வர்த்தகத்தில் ஈடுபட்ட மிக முக்கியமான கூட்டங்களாகும். இலங்கையோடு தமிழகத்தை பெரிதும் இணைத்த மிக முக்கியமான கூட்டம் என்றால் அது வணிக குலங்களையே குறிப்பிட வேண்டும். தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலே வர்த்தக உறவானது காணப்படுவதை அவதானிக்கமுடிகிறது. அதனைச் இலக்கியச் சான்றுகளின் ஊடாக மிக இலகுவாக அவதானிக்கமுடியும். குறிப்பாகச் சங்க இலக்கியத்திலே ஈழத்துணவு பற்றிய குறிப்புகள் உண்டு.

*'தென்கடல் முத்தும்*
*குணகடல் துருகியும்*
*கங்கை வாரியம் காவிரி பயனும்*
*ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்'*

என்ற பட்டினப்பாலைப் பாடலிலே ஈழத்து உணவுகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆகவே சங்க காலத்திலிருந்தே ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான தொடர்பு காணப்பட்டடது. அதுபோலவே வர்த்தக உறவும் தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் உண்டு. அதிலே பெரிய எழுச்சியானது மத்திய காலப்பகுதியிலே தோற்றம் காண்கிறது. குறிப்பாகப் பொலனறுவையைச் சோழர்கள் கைப்பற்றி ஆட்சி செய்த காலப் பகுதியிலே தமிழகத்து வணிக குலங்கள் ஈழத்தில் வந்து தங்கி தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக ஓர் அரசியல் சூழலை ஈழத்தில் உருவாக்கியமையைக் குறிப்பிட முடியும்.

## சோழர்களின் காலத்தில் எழுச்சியுற்ற வணிகம்

ஈழத்தில் தமிழக சோழ ராஜாக்கள் ஆட்சி நிலவிய காரணத்தினாலே ஈழத்தில் விளைகின்ற பொருள்கள் எவை என்கின்ற தீர்மானமும், ஈழத்தில் எவை அவசியப்படுகின்ற பொருள்கள் என்கின்ற முடிவும் எடுக்க முடிந்திருக்கின்றது. எனவே, இங்கு அவசியமான பொருள்களைத் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு இறக்குமதி செய்யக்கூடிய நிலை ஏற்படுகிறது. இந்த பொறுப்பைச் சில வணிக குலங்கள் ஏற்றன. எவ்வாறு ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலப் பகுதியிலே கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி தனது வர்த்தக நோக்கத்துக்காக வருகை தந்ததோ அதுபோலவே இந்த வணிக குலங்களும் வருகை தந்தன. குறிப்பாக சோழருடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் ஈழத்துக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வரவும் இங்கு அதிகமாகக் காணப்படும் ங்களைத் தமிழகத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கும் வணிக குலங்களின் உதவியை அரசர்கள் நாடினார்கள்.

அதன் அடிப்படையிலேயே சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழ் வணிக குலங்களின் மேலாதிக்கமும் அவர்களின் அதிக தொடர்புகளும் குறிப்பாகப் பொலநறுவைப் பகுதிகளில் காணப்படுகின்றன. பொலநறுவைக் காலத்திலே அதிகளவு தமிழ்க் கல்வெட்டுகள் கிடைப்பதற்கான காரணம் இந்த வர்த்தகமே. சோழர் ஆட்சி நிறைவடைந்து சென்றதற்குப் பின்னரும்கூடச் சிங்கள அரசர்கள் கல்வெட்டுகளைப் பொறிக்கின்றபொழுது தமிழில் கல்வெட்டுகளைப் பொறித்தனர் அதற்குக் காரணம் வணிகர்களுடைய தேவைப்பாடாகும். இவ்வாறு வணிககுலம் சார்ந்து கிடைக்கின்ற கல்வெட்டுகள் பல வரலாற்றுச் சான்றுகளை வெளிப்படுத்தகின்றன. குறிப்பாக இலங்கைக்கு வந்து வணிகம் செய்த வணிக குலங்கள் எந்தெந்த இடங்களில் வணிகத்தினை மேற்கொண்டனர் என அறியமுடிகின்றது. ஐஞ்நூற்றுவர், வீரவழஞ்செயர், நானாதேசிகர் போன்ற மூன்று குலங்கள் தமிழகத்திலிருந்து வருகைதந்து ஈழத்திலே வணிக நடவடிக்கைகளை மேற்கொண்ட குலங்களாகக் காணப்படுகின்றன. ஈழத்தில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பதவியாவில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் வழஞ்செயருடைய குலங்கள் பதவியாவில் வாழ்ந்து அங்கே வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாக குறிப்பிடப்படுகின்றன. அவ்வாறு வாழ்ந்தவர்கள் அங்கே ஒரு வணிக நகரத்தினை உருவாக்கினர். இவ்வாறாக பட்டினங்களை உருவாக்குகின்றனர். அவ்வாறு அவர்கள் உருவாக்கிய வணிக நகரத்தின் பெயர் தான் ஜெயபொழில்புரம் எனப்பட்டது.

பொலனறுவையை அண்மித்த பிரதேசத்தில் ஐஞ்நூற்றுவர் சேர்ந்து வாழ்ந்த ஒரு பகுதியை விக்ரம சாலமேகபுரம் என அழைக்கப்பட்டு அதனை ஒரு வணிக நகரமாகவும் உருவாக்கினார்கள். இது ஐஞ்நூற்றுவருடைய வணிக நகரமாக இருந்தது. அவர்கள் அங்கேயே தங்கி இருந்து பொருளாதாரத்தை மேம்படுத்தியதன் காரணமாக சாதாரணமாக இருந்த பிரதேசங்கள் நகரங்களாக விளங்கின. இவ்வாறு வருமானம் அதிகரிக்க அதிகரிக்க சீர்கேடுகள் உள்நுழைந்தன. உதாரணமாக கொலை, கொள்ளை, களவு போன்றன இடம்பெற்றன. ஆகவே இந்தக் கொள்கையில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக வணிகக் குலங்கள் தமக்கென்று பாதுகாப்புப் பிரிவினை ஏற்படுத்தினார்கள்.



இவ்வாறு தமிழகத்திலிருந்து வந்த பாதுகாப்பு பிரிவுகளாக வேலைக்கார படை, வீரக்கொடிப் படை என்பவற்றைக் குறிப்பிட முடியும். சோழராட்சி நிலவிய காலத்திலும்கூட இலங்கையில் சிங்கள மன்னர்கள் வேலைக்காரப் படையை இங்கே வைத்திருந்தனர். காரணம் அவர்களின் நேர்மை. எனவே அரசர்கள் தங்களுடைய அரச கருமங்களை கண்காணிக்கின்ற பொறுப்பினை அவர்களுக்கு வழங்கியிருந்தனர். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் பின்னால் தலதா மாளிகையின் பாதுகாப்பு இவர்களுக்கு உரித்துடையதாகின்றது. இவ்வாறு தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையே வர்த்தக நடவடிக்கைத் தொடர்பு சங்க காலம் தொடக்கம் சோழர் ஆட்சி காலப்பகுதி வரையிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தமைக்கான சான்றுகளை ஈழத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளின் ஊடாக அறிய முடிகின்றமை சிறப்பானதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், வட்டு இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற புத்தக அரங்க விழாவின் சில பதிவுகள். (ம)

# கலைமுகம் காலத்தேவை




கசிற்றிதழ்களின் காலத்தை இழந்துகொண்டிருக்கிறோம். ஒருகாலத்தில் சிற்றிதழ்கள்தான் இலக்கியப் போக்கையும், அதன் வீச்சையும் தீர்மானித்தன. சிற்றிதழ்களில் படைப்புகள் வெளிவருவதை பெரும் அங்கீகாரமாகப் படைப்பாளிகள் கொண்டாடினர். ஆனால் அவையெல்லாம் பொய்யாய், பழங்கதையாகிப் போய்விட்டன. இன்றைய அவசர உலகில் வாசிப்பு பற்றிய பிடிமானம் பலரிடமும் இல்லாமல் போனதன் வெளிப்பாடாக சிற்றிதழ்கள் பலவும் தம் மூச்சை இழந்துவிட்டன. ஆனாலும் எஞ்சிக்கிடக்கும் நம்பிக்கையை மட்டும் பற்றுக்கோடாகக் கொண்டு இப்போது சில சிற்றிதழ்கள் வெளிவரத்தான் செய்கின்றன. அவற்றில் மிகமுக்கியமானது கலைமுகம்.

கலை இலக்கிய சமூக இதழான 'கலைமுகம்', திருமறைக்காலமன்றத்தின் வைரவிழா ஆண்டில், 78ஆவது இதழை பிரசவித்துள்ளது. கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புக்கவிதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள் எனப் பல பொலிவான முகங்களோடு 'கலை முகம்' தவழ்கிறது.

உலக இலக்கியம் என்கின்ற வார்த்தை அல்லது அது தொடர்பான எண்ணக்கரு பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் சமகால வெளிப்பாடுகளில் 'உலக இலக்கியம்' என்கின்ற புரிதல் ஒரு தவறான வழிகாட்டுதலில் இருந்து புறப்படுவதை 'கலப்பின இலக்கியம்' எனும் கட்டுரை எமக்கு தெளிவுபடுத்துகிறது. அவ்வாறே கடல் சார்ந்த இலங்கை அரசியலில் திருகோணமலை உட்துறைமுகம் பெரும் பங்காற்றி வருவதையும், நில அரசியலுடன் இணைந்த மக்களின் வலி, வாழ்க்கை முறைகளைப்பற்றி பேசுவதான கௌரிபாலனின் 'உட்துறைமுகம்' நாவல் பற்றிய லலிதகோபனின் விமர்சனக் குறிப்பு, அந்த நாவலின் இன்னொரு பரிணாமத்தை வெளிப்படுத்துகின்றது

அகலிகைக்கும் கௌதம முனிவருக்கும் இடையிலான புரிந்துணர்வுக் காதலை 'துளசி செடி' எனும் சிறுகதையும், இரக்கமுள்ள மனதுக்கு இவ்வுலகில் மதிப்பில்லை என்பதை 'அவன்' எனும் சிறுகதையும் அருமையாக வெளிப்படுத்துகின்றன.

யாழ். பல்கலைகழகத்தின் ஆங்கில முன்னோடியாகத் திகழ்ந்த சிவகுருநாதனின் வாழ்க்கை நடப்பை கூறிய விதம் சிறப்பு. எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின் 'ஆடுகளும் ஓநாய்களும்', சாந்தனின் 'மணிப்பூர் நினைவுகள்', அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் 'மகிழ்ச்சி தரும் உள ஆற்றுப்படுத்தல்'ஆகிய நூல்களின் விமர்சனங்களும் கலைமுகத்தில் மிளிர்கின்றன.

ஒருவர் தனது சமூகத்தின் பிரச்சினைகளைப் பிறமொழி பேசும் வெளியுலகிற்கு வெளிப்படுத்துவதற்கும், மொழிபெயர்ப்பின்போது படைப்பின் பொருள் சிதைவுகள் நேர்ந்துவிடுவதைத் தவிர்ப்பதற்கும், பரந்த வாசகர் பரப்பை உருவாக்குவதற்கும், ஒருவர் 'எக்ஸோபோனிக்' எழுத்தாளராவது அவசியம் என்பதை 'எந்த மொழியில் எழுதுவது' எனும் பகுதி சிறப்பாகவே தெளிவுபடுத்துகிறது.

ஓவியர் மாற்குவின் சிதையாத பல ஓவியங்கள் வரலாற்றுச் சின்னங்களாக பாதுகாக்கப்பட்டமை தொடர்பிலும் , மு.பொன்னம்பலம் தமிழிலக்கியத்தில் ஏற்படுத்திய அதிர்வுகளைப் பற்றியும் 78 ஆவது கலைமுகம் பதிவுசெய்துள்ளது.

ஏமாற்றத்தின் வலியை சில கவிதைகள் அற்புதமாக எடுத்துக்கூறுவதோடு, 'அம்மாவின் மிச்சங்கள்' எனும் கவிதை தாயின் பரிவை அழகாக எடுத்தியம்புகிறது.

யாழில் நடைபெற்ற சர்வதேச புத்தகத்திருவிழா பற்றியும், 60 அகவை காணும் திருமறைக் கலாமன்றத்தின் வரலாற்று சேவைகள் பற்றியும் கலைமுகம் எமக்கு நினைவூட்ட மறக்கவில்லை.

இவ்வாறாக கலைமுகத்தின் ஒவ்வொரு முகமும் ஏதோ ஒரு உணர்வை, தெளிவை, அந்த விடயம் சார்ந்த அறிவை எமக்குள் நுழைத்துவிடுகின்றது. ஒரு இதழை உருவாக்குவது என்பது ஒரு தாய் தன் குழந்தையை பெற்றெடுப்பதற்கு சமமானது அவ்வளவு கடினமான ஒரு பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பது அதிலும் ஈழத்தில் அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பது என்பது பாராட்டுக்குரியதாகும். அந்தவகையில் கலைமுகத்தின் வரவு காலத்தின் தேவை.

புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையால் கருவழியும் தமிழர் புலமையின் கர்ப்பப்பை

பனுவலர்

குற்றமற்ற உணர்வுடன், போதைவஸ்த்துக்களினை நுகரும் நிலை யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் ஏனைய அரச,தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஒரு குறிப்பிட்ட தொகை மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளமை பெற்றோரையும் சமூக அக்கறையுள்ளவர்களையும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது. இது ஒரு சாதாரணமயப்பட்ட செயற்பாடாகியுள்ளது. கல்வி நிறுவனங்களுள் இவற்றைப் பயன்படுத்தாமல் ஒழுக்கமாகவே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவிரும்பும் மாணவர்களுக்கும் பல சட்டவிரோத ஆபாசப் பகிடிகளும் வதைகளும் நையாண்டிகளும் இடம்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. சில கட்டங்களில் போதையில் எல்லைமீறும் ஆண் மாணவர்களால் பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுவது சகிக்கமுடியாத அளவுக்குப் போய்விட்டது. ஆண் மாணவர்களில் ஒருசாரார் தொடர்ச்சியாக போதைக்குள் மூழ்குவதால் விரிவுரைகளுக்கும் வகுப்புகளுக்கும் சமுகமளிப்பதில்லை என்பதையும் அறிமுடிகிறது. போலியான சமநிலையற்ற நடத்தைக் கோலங்கள், தம்மையே அறியாத பிறழ்ச்சிகள், துர்நடத்தைகள், கற்கும் நேரத்தை ஓய்வு நேரமாக மாற்றிப் போதை நுகர்தல், கலந்துரையாடல்களிலும் கற்றலிலும் சிந்திப்பதிலும் பாதிப்பு, உணவு எடுப்பதைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல் என்பவற்றினால் யாழ். ஆண் மாணவர்களில் ஒரு சாரார் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களின் பெற்றோர் செய்வதறியாது திகைத்துள்ளனர். இங்கு புனர்வாழ்வு நிலையங்களும் சிகிச்சை மற்றும் உளவள நிலையங்களும் பற்றாக்குறையாகவுள்ளன. ஒரு சமூகத்தின் சிந்திக்கும் ஆற்றல், கற்கும் ஆற்றல், தீர்மானமெடுக்கும் ஆற்றல், சமூக பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் பங்காற்றும் ஆற்றல், உரிமைகளையும் கடமைகளையும் சட்டச் சூழல் முதலியவற்றையும் புரிந்துகொண்டு நடக்கும் ஆற்றல் ஆகியன இல்லாமல் செய்யப்படுவதற்கான ஒரு சதியாக போதைப்பொருள் யாழ்ப்பாணத்துக்கு விநியோகிக்கப்படுவதாகவே பலர் நம்புகின்றனர். விடுதலைப் போர்களில் ஈடுபட்ட உலகளாவிய சமூகங்களுக்கும் இவ்வாறாகப் போதையூட்டி அவர்களின் உடல் உள தகைமைகளையும் விடுதலை உணர்வையும் சரியான சிந்தனைத் தெளிவையும் மழுங்கடிக்க எதிரி அரசுகளின் முகவர்களால் எடுக்கப்பட்ட திட்டமிட்ட சதிவலைகளை ஆய்வாளர்கள் நூல்களாக எழுதியுள்ளனர்.

இந்த மேற்குலகம் சீனர்களை அழிக்கப் போதை எனும் பயங்கர நச்சாயுதத்தை அன்றும் இன்றும் பயன்படுத்திவருகிறது. சீன அரசும் மக்களும் இன்றும் சீனாவில் போதைக்கு எதிராக யுத்தம் செய்கிறார்கள். அவ்வாறான போதைக்கெதிரான "ஜனநாயக யுத்தம்" ஒன்றை யாழ்ப்பாணம் மட்டுமல்ல முழு இலங்கையும் தொடங்கவேண்டும். இப்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகங்கள் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சட்டபூர்வ நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போதைக்குள்ளாகும் மாணவர்கள் வளாகத்துக்குள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தும் விசாரணைகள் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் இழுத்தடிக்கப்பட்டுவருகின்றன. இதனால் சட்டவிரோதச் செயல்கள் தொடர்வதோடு பிறழ்ச்சியான சட்டவிரோதச் செயல்களில் போதையில் ஈடுபடும் மாணவர்கள் மீள மீளத் திருத்தமில்லாமல் அதே குற்றங்களைத் தொடரவும் அனுமதிக்கப்படுகின்றனர். பாதுகாப்புப்பிரிவும் மாணவர்களில் சிலர் போதைகளை நுகருவதற்குக் கூடும் பகுதிகளைக்கூடத் தவிர்க்கிறார்கள் என்று உள்ளகத்தகவல்கள் கூறுகின்றன. முதலாம் வருட மற்றும் இரண்டாம் வருட மாணவர்களில் ஒரு பகுதியினர் மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களில் போதைவஸ்த்துக்கள் நுகரும் ஒரு பகுதியினரைத் தம்முடன் உறவாக்கிக்கொள்ளவும் ஒரு போலி வீரப் பிரதாப உணர்வுடன் மிதக்கவும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தக்கூடும்.

தெற்குப் பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு அங்கு போதைவஸ்துக்களோ அவற்றைப் பாவித்துத் தலைகரணமாக ஒழுக்கவீனங்களில் ஈடுபடுதலோ கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் யாழ். பல்கலையில் ஒரு கட்டவிழ்ந்த நிலையிலேயே இவ்விடயம் காணப்படுகிறது. மாவாப் பாக்கு நுகர்தல் எனும் போர்வையில் மாவாப் பாக்குடன் பல்வேறு நவீன செயற்கைப் போதைவஸ்த்துக்களும் தீவிர போதை ஊக்கிகளும் குறிப்பிட்ட ஒரு பகுதி மாணவர்கள் மத்தியில் உலாவுவதாகவே உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் சில மாணவர்கள் மீது பல்கலைக்கழகத்தின் ஆரம்ப விசாரணை, முறைசார் விசாரணை, ஒழுக்காற்றுச் சபை ஆகிய மூன்று கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கலைப்பீடாதிபதி பேராசிரியர் சுப்ரமணியம் ரகுராம் மேற்கொண்டிருந்த வேளையில் பல்கலைக்கழகப் பேரவையின் சில உறுப்பினர்களால் அந்த ஒழுக்காற்றுச் சபை முடிவுகள் தடுக்கப்பட்டன. ஒரு பேராசிரியர் போதையற்ற ஒழுக்கமான பல்கலைக்கழகச் சூழலை உருவாக்க முனையும்போது பல்கலைக்கழகப் பேரவை அதற்கு உறுதுணையாக நிற்கவேண்டுமே தவிர சமூகத்திற்கு எதிராக விரோதமாகத் தவறிழைத்த மாணவர்களைத் திருத்தாமல் தொடர்ந்தும் சீரழியவைக்கக்கூடாது.

இவ்வாறு ஒரு சமூகப் பொறுப்பற்ற சூழல் ஏற்பட்டதையடுத்து அங்கு கலைப்பீடாதிபதியாக சேவை செய்த பேராசிரியர் சுப்ரமணியம் ரகுராம் பீடாதிபதிப் பதவியை இரஜினாமா செய்துள்ளார். அவர் மாணவர்களின் ஒழுக்கம், கல்வி, வளர்ச்சி, சமூக அக்கறை முதலியவற்றில் தன்னலம் பாராது பல வருடங்களாக தீவிர அக்கறையுடன் செயற்பட்ட பேராசிரியர். மாணவர்கள் மத்தியிலும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மத்தியிலும் போதையற்ற பல்கலைக்கழகமாக தமது பல்கலைக்கழகத்தை மாற்றவேண்டும் எனும் விழிப்புணர்வு இப்பொழுது உறுதியாக ஏற்பட்டுள்ளது.

28.01.2025 நேற்று பிற்பகல் வரை கிடைத்த தகவல்களில் ஒழுக்காற்று நடவடிக்கையை துணைவேந்தர் விசாரணை முடிவுகளின்படி அமுலாக்கவுள்ளார் என்று பல்கலைக்கழக மாணவர் வட்டாரங்கள் தெரிவித்தன. பேராசிரியர் ரகுராமும் மீளவும் கலைப்பீடாதிபதி பதவியைப் பொறுப்பெடுக்கவேண்டும் என்றும் சமூக மட்டத்திலும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியிலும் அபிப்பிராயம் பலமாகவுள்ளது. என்ன மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தமிழினம் தமது ஆரோக்கியமான சமூகத்தைக் காப்பாற்றவேண்டுமானால், போதையற்ற சமூகமும், போதையற்ற பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் எம்மிடம் இருக்கவேண்டும். அதற்காக பல்கலைக்கழகத்துள் இருந்து எழும் நேர்மையும் துணிச்சலும் மிக்க குரலுக்கு சமூகத்தின் சகல தரப்புகளும் வெளிப்படையாக ஆதரவு வெளியிட்டு ஒருமித்துச் செயற்பட்டு எமது கல்வியையும் மனிதவளத்தையும் கல்வி நிறுவனங்களையும் காப்பாற்றியாகவேண்டும்.

# நவீன யுகத்தை வெல்வதற்கு சுயமுயற்சி கைகொடுக்கும்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

19

வெற்றி என்ற சிகரத்தைத் தொட்டே ஆக வேண்டும் என்றால், விரும்பியோ, விரும்பாமலோ சுயமுயற்சியை செய்ய வேண்டும். எந்தவொரு உந்துதலும் இல்லாது ஒன்றை அடைவதற்கு நாமே முயற்சி என்ற விதையை விதைக்க வேண்டும்.

சிறுவயது முதல் எங்களுடைய எண்ணம், செயல் போன்றன விரிவடைந்து செல்கின்றன. வெற்றி என்ற புள்ளியை நோக்கிச் செல்வதற்கு பல தடைகள் ஏற்படுகின்றன. அந்த நேரத்தில் சுயமுயற்சி எப்போதும் துடிப்போடும், வெற்றியை நோக்கியும் இருக்க வேண்டும். மற்றவர்கள் எங்களை தூண்டி நாம் முயற்சி எடுப்பதைக் காட்டிலும், நாம் எம்முடைய நலனுக்காக, முயற்சி எடுக்க வேண்டும். பெரும்பாலும் வெற்றியை அடையவேண்டும் என்று அதிகமாக எண்ணுபவர்களும், முயற்சியை மேற்கொள்பவர்களும் தாமே அதற்கான வழிகளை உருவாக்குபவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு திரைப்படத்தில், ஒரு இடத்திலே தங்கம் இருக்கிறது. ஆனால் அதனைப் பெறுவதற்கு எட்டு அடி தோண்ட வேண்டும். முதலில் வந்தவர் கொஞ்ச அடி தோண்டி விட்டு அதில் புதையல் இல்லை என்றும் அதன் பின் அவ்வழியாக வந்தவரும் சில அடி தோண்டிவிட்டு இடையில் சென்றுவிட்டார். பின்பு மூன்றாவதாக வந்து புதையலைத் தோண்டியவர் ஒரு அடி தோண்டியபோதே தங்கம் கிடைத்து என்று திரைப்படத்தின் அந்த கதை குறிப்பிடுகிறது. இங்கு தங்கமோ அல்லது புதையலைப் பற்றியோ இவ்விதி பேசவில்லை. அதற்குக் காரணமாக பல மனிதர்கள் இப்படித்தான் தங்கள் முயற்சிகளில் பெரிதும் ஆரம்பத்தில் தங்களைத் தியாகம் செய்கின்றார்கள். ஆனால் வெற்றி கிடைக்கப்போகும் தருவாயில் தங்கள் முயற்சியில் இருந்து பின்வாங்கிவிடுகின்றார்கள். பலரது அரவணைப்பில் இருந்து வளர்பவர்களுக்கு அது இன்னும் பெரிய சவாலாக இருக்கப்போகின்றது என்பதை நன்கு உணரமுடிகின்றது. பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளிவருவது பயனுள்ள விடயத்திற்காக இருக்க வேண்டும். பலர் இதனை முறையாகப் பயன்படுத்த தவறிவிடுவதால் தங்கள் ஆற்றல், முயற்சிகளில் நம்பிக்கை கொள்ளாது மட்டுப்படுத்திவிடுகின்றார்கள்.

பலர் தயக்கத்தில், தங்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்து வெளியேறத்தெரியாதவர்கள் ஏன் எங்களுக்குத் தேவையில்லாத வீண் வேலை என்று ஒரு துளி முயற்சியேனும் மேற்கொள்ளாது. நானும் எனது இடமும் என்று ஒருபுறம் ஒதுங்கியிருக்கிறார்கள்.

இப்படியாக இரு பிரிவினரும் தங்கள் மீது நம்பிக்கை சிறு துளியேனும் வைக்காது. தாங்கள் தங்கியிருக்கும் நபர்களில் நம்பிக்கை வைத்திருப்பார்கள். துரதிஸ்டவசமாக அவர்கள் நம்பிக்கை கொண்டவை கைவிடுமாக இருந்தால் இவர்களின் நிலைமை கடினமாகப் போய்விடுவதும் உண்டு. நாம் வெற்றி என்ற மைல்க்கல்லை அடையவேண்டும் என்றால், தீராத்தாகம் கொண்டவர்களாக இருந்தால் சுயமுயற்சி என்ற ஏணியும், ஒரு பாதுகாப்பான வட்டத்திற்குள் முடங்கிவிடாத தன்மையுமே தேவைப்படுகிறது. இந்த வெற்றியின் மகத்துவத்தை உணர்ந்து எந்தத் தடைவந்தாலும் சுயமுயற்சியும், பாதுகாப்பு வட்டத்தில் வெளிவந்து செயற்படுவதும் அவசியம் என்பதனைப் புரிந்து வெற்றிநடை போடுவோம்.



புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
0773165555
puthanpoikaiuthayan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிக்கப்படாத விசாரணைகள் தலையீடுகள் இன்றி ஆரம்பம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான முடிக்கப்படாத விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி விசாரணைகள் நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வசீம் தாஜுடீன், லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் கொலையுண்டமை, பிரகீத் எக்னொலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் உட்பட கடந்த கடந்தகாலத்தில் நடைபெற்ற குற்றச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில விசாரணைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நடந்த அனைத்துக் குற்றங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். இந்த விசாரணைகள் யாவும் அரசியல் நலன்களின் அடிப்படையில் நடத்தப்படவில்லை. குற்றவியல் மற்றும் நிதிக்குற்றங்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி நடத்தப்படுகின்றன - என்றார். (அ-எ-இ)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

**சபைக்குச் சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தில் கிழக்குப் புறமாக புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்**

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.01.29 - 2025.02.11 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2025.02.11 பி..ப 2.30 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2025.02.11 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

நீண்டகால குத்தகை

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Fronting to Oodakarai Lane – Ground Floor | | | | | |
| Oodakarai Lane- Upper Floor | | | | | |
| 12 | Shop 11 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 13 | Shop 12 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 14 | Shop 13 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 15 | Shop 14 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 16 | Shop 15 FF | 7,000.00 | 1,680,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 17 | Shop 16 FF | 3,500.00 | 840,000.00 | 100,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கடை வாடகை சம்பந்தமாக சபையினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை குறித்த மாத இறுதிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவதற்கும் இக்கால எல்லைக்குப் பிந்திச் செலுத்தப்படும் வாடகைத் தொகையின் 10% தண்டப்பணம் செலுத்துவதற்கும், தொடர்ந்து மூன்று மாதங்கள் பணம் செலுத்தத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. சித்திகர கேள்விதாரராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 18.02.2025 ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினைப் பெற்று வியாபாரம் அல்லது தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனுடன் தகுந்த காரணங்களின்றி வியாபார நிலையம் பூட்டி வைத்தல் கூடாது.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது மதுபான வகைகளையோ அல்லது போதைவஸ்துக்களையோ அல்லது தடை செய்யப்பட்ட வேறு எந்தப் பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திபெற்ற குத்தகைக்காரர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திபெற்ற குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச.பாலரூபன்,
செயலாளர்
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம். 29.01.2025

(CR/44197) J-1


# ஆட்சியைத் தக்கவைக்கும் கைங்கரியமும் அவசியம்

*பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

ஆட்சியைப் பெறுவதற்கு பாடுபட்டதுபோல் அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்கு பல மடங்கு பாடுபடவேண்டும். அந்தவகையில் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும்வரை நாம் ஓயவும் மாட்டோம் ஆட்சியைக் கைவிடவும் மாட்டோம் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதாரம் உட்பட எல்லா வழிகளிலும் வீழ்ச்சியடைந்த நாடொன்றே எமக்குக் கிடைக்கப் பெற்றது. சுகாதாரம், கல்வி உட்பட அனைத்துத் துறைகளையும் சீர்செய்யவேண்டியுள் ளது. நாம் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்று சுகபோகம் அனுபவிக்கவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முன்னுரிமையளித்துச் செயற்பட்டுவருகின்றோம்

எமக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் போலிப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இவற்றுக்கு அஞ்சமாட்டோம். கிராமமட்டங்கள் உட்பட அனைத்து மட்டங்களுக்கும் சென்று உண்மையை மக்களிடம் தெளிவுபடுத்துவோம்- என்றார். (ச-44)

# இந்தியா-பிரிட்டன்-நியூசிலாந்து தூதுவர்கள் யாழ்ப்பாணத்தில் பேச்சு

இந்தியா, பிரிட்டன் மற்றும் நியூசிலாந்துத் தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ரூ பற்றிக், இலங்கைக்கான நியூசிலாந்துத் தூதுவர் டேவிட் பின்னி இருவரும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். அவர்களும் இந்தியாவின் யாழ்ப்பாணத் துணைத்தூதகத்தின் துணைத்தூதுவரும் நேற்று இரவு தனியார் விடுதியொன்றில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (ம-125)


# மணிவிழா வாழ்த்து



## திருமதி கனகாம்பிகை சிவனருட்சோதி

SLTS - I,
Primary Trained B.A (Dip. in . Edu)

- ஆரம்பக் கல்வி : யா/ மயிலிட்டி வடக்கு, கலைமகள் வித்தியாலயம்
- இடைநிலைக்கல்வி : யா/ நடேஸ்வராக் கல்லூரி

**ஆசிரியர் சேவை**

- 23.03.1990 - 31.03.1993 - யா / மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம்
- 01.04.1993 - 15.02.1996 - யா / வீமன்காம ம. வி.
- 16.02.1996 - 11.01.2012 - யா / மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம்
- 12.01.2012 - 06.08.2024 - யா / வல்வை சிவகுரு வித்தியாசாலை
- 01.01.2024 - 06.08.2024 - யா / வல்வை சிவகுரு வித்தியாசாலை **பிரதி அதிபராக பகுதித் தலைவராக**
- 02.01.2020 - 06.08.2024 - யா / வல்வை சிவகுரு வித்தியாசாலை

**12 வருடங்களாக** எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி **06.08.2024** இல் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற எமது பாடசாலையின் **ஆசிரியரான திருமதி கனகாம்பிகை சிவனருட்சோதி** அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வின் பின்பும் அவரது வாழ்வு மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்த்துவோர் :

**அதிபர், ஆசிரியர், ஊழியர் நலன்புரி சங்கம்**
**யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை.**

(cs 573303) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

## அமரர் நடராசா காசிவேந்தன்

(MA, B.Com, Dip. in. pds, Dip.in.Mgt)

(முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் சமுர்த்தி மகாசங்கம் - உடுவில்)



தோற்றம் 25.06.1967 — மறைவு 22.01.2012

திதி: தை அமாவாசை (29.01.2025)

ஆண்டுகள் பதின்மூன்றானாலும் - வையகத்தில்
ஆழ்மனம் துடிக்கின்றது உன் நினைவினில்
ஆனந்தம் பல கண்டிடினும் மனம் ஆறுதில்லை
ஆழ் கடல் வற்றிய நாளில் இருந்து.

உன் விழுதுகள் கண்டு தேற்ற நினைக்கையில்
உறுத்துகின்றது நாள்தோறும் கண்ணிமைக்கும் பொழுதினில்

அளவில்லா புகழ் கொண்ட - உன் விழுதுகள்
ஆர்ப்பரிப்பை கண்டு மகிழ்ந்திட நீர்
அவனியில் இல்லை என்கின்ற மனத்தவிப்பு
அடிவயிற்றில் நெருப்பாய் எரிகின்றது.

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
**மனைவி, பிள்ளைகள்.**

(cs57342) (N-1)(N-1)

# வீட்டுக்கிருத்திய நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 . 07 . 1942 | 30 . 12 . 2024 |

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் 42, லோறன்ஸ் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 ஐ வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்துரை கமலேஸ்வரி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம் - யாழ்ப்பாணம்)**

அன்னாரின் இல்லத்தில் நாளை 30.01.2025 வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கதிர்காமக் கந்தனருள் பெற்றுவந்து
முருகா முருகா என்று சொல்லி
முருகனடி சேர்ந்தனையோ ....
காக்க காக்க கனகவேல் என்று பாடி
வேல் பிடித்துச் சென்றனையோ ...
அமாவாசைத் திதியன்று
அப்பா உமை "வா" என்றழைக்க
அவருடன் நீரும் சென்றீரோ ...
"அம்மா" என்றழைக்க "ஓம் சொல்லுங்கோ"
பதில் இங்கில்லையம்மா
உடன் பிறப்புக்கள் பாசத்துடன் "அக்கா" என்றழைக்க
உபதேசம் ஏதும் சொல்லுமம்மா
நீதி, அநீதி, தர்மம், அதர்மம்,
ஒழுக்கம், விழுப்பம் கற்றுத் தந்த ஆசான்
நீர் இறையடி சேரும் நேரம்
அறிந்திருந்தீரோ அம்மா
நாட்கள் பல கடந்து சென்றாலும் - உம்
புன்னகையும், அன்பும், பேச்சும், அறிவுரையும்
என்றும் எம் நெஞ்சில் உண்டு
அம்மா, உம் ஆத்மா சாந்தியடைய கந்தசுவாமியையும்,
பருத்திப் பிள்ளையாரையும் நாம் வேண்டுகின்றோம்.
எம் குடும்பம் தழைக்க குலவிளக்காயிருந்து வழிகாட்டுமம்மா

**பிரிவால் துயருறும்**
Dr. S. **சுசந்தன் குடும்பம் (மகன்)**
**கமலாகரன், ரஜனி, மனோகரன், பாஸ்கரன் (சகோதரங்கள்),**
**தொடர்புகளுக்கு:-**
Dr. S. **சுசந்தன்**
**0772487800, 0757487800**

(CR/44194) J-1

# ஜனாதிபதியின் வடக்குப் பயணத்தில் மக்களின் சில பிரச்சினைக்குத் தீர்வு!

யாழ்ப்பாணம், ஜன.

ஜனாதிபதி அநுரகுமாரவின் வடக்குப் பயணத்தின்போது, வடக்கு மக்களின் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அமைச்சர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரல் மாதம் இறுதிக்குள் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம27)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## மல்லிகாதேவி (மல்லி) மகேந்திரராஜா

தோற்றம் 24.11.1927

மறைவு 04.02.2019

திதி: அமாவாசை (29.01.2025)

கோடி உறவு அருகில் இருந்தாலும்
அம்மாவின் அன்பை மிஞ்சிய
உறவு இவ்வுலகில் இல்லை.

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

(cs.2383) (N -1)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 . 04 . 1950 | 25 . 01 . 2025 |

## பாலசிங்கம் முருகதாஸ்

யாழ் வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் ஜெனிவாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் முருகதாஸ் கடந்த 25.01.2025 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - விசாலரெத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி - செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், அதிஸ்டகலாராணி அவர்களின் அன்புக் கணவரும், சிவதர்சனன் (கண்ணன் - UK), கல்யாணி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற யோகதர்சனன் மற்றும் சிவரூபன் (ரூபன் - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபாரதி (UK), ரவிச்சந்திரன் (யாழ்ப்பாணம்), நிசாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துளசிகாமணி (கனடா), திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை, யோகதாஸ், குகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதுசன் (UK), கோபிசன் (UK), ஜஸ்மினி (UK), சஹானா, ரஜிவன், அபிநாத், அபிசா, சதுசனா (யாழ்ப்பாணம்), ஜதுரா (சுவிஸ்), சேயோன் (சுவிஸ்), ரக்ஷயா (சுவிஸ்), சோபிதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2025) புதன்கிழமை சுவிஸ் நேரப்படி பிற்பகல் 02.30 மணியளவில் சுவிற்சிலாந்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**சகோதரர்கள்**
**யோகதாஸ் - 077 654 4008**
**குகதாஸ் - 076 704 7104**

**25/3 கோணாவளை லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

(CS/57348) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 02 . 1958



மறைவு 27 . 01 . 2025

## செல்லத்துரை கனகம்மா

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட செல்லத்துரை கனகம்மா நேற்று முன்தினம் (27.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் பாசமிகு மனைவியும், தங்கம்மா, காலஞ்சென்ற இராசம்மா மற்றும் வேதாரணியம், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் சடாசிவம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன் (London), றமேஸ்கரன் (London), காலஞ்சென்ற சுரேஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரண்யா வின் அன்பு மாமியாரும், அபேதன், ஆருஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 310 6598, 076 073 7132

குடமியன்,
வரணி.

(cs.57233) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1940



மறைவு 25 . 01 . 2025

## யோகம்மா விநாசித்தம்பி

சாவகச்சேரி வடக்கு, டச்சு வீதி, காளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகம்மா விநாசித்தம்பி அவர்கள் கடந்த 25.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகமுத்து தம்பதிகளின் மருமகளும் காலம் சென்ற கார்த்திகேசு விநாசித்தம்பி (ஆசிரியர் - உசன்)அவர்களின் பாசமிகு மனைவியும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜிதா மற்றும் றெஜிதா (குணம்,ஜேர்மனி), றெஜிக்குமார்(ராசன்,கனடா), காலஞ்சென்ற சசிக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோபாலகிருஸ்ணன் (செல்வன் -,ஜேர்மனி), வாகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபனா(ஜேர்மனி), அபினா(ஜேர்மனி), கிருத்திகன் (ஜேர்மனி),மிர்சிகா (கனடா), திலக்சிகா (கனடா), திலக்ஷன் (கனடா) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, முத்துப்பிள்ளை மற்றும் சிவயோகநாதன், இராமநாதர், காலஞ்சென்ற சண்முகரத்தினம், மற்றும் தர்மராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூத்வுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி இலக்கம்

மகள் :- +16476216485
மகள் :- +4915756232501
மருமகள்: +491636166799
பெறாமகன்:- +94777705887
உறவினர் :- +94779560495
மருமகள் :- +14166092478

தகவல் : குடும்பத்தினர்
டச்சுறோட்,
சாவகச்சேரி வடக்கு

(CS/57553) J-1

## போதை மாத்திரையுடன் நபரொருவர் கைதானார்!

யாழ்., ஜன. 29

சுன்னாகம் மயிலணி பகுதியில் போதை மாத்திரைகளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 35 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ம-23)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் சுந்தரலிங்கம்

(முன்னாள் ஆசிரியர் : கிளி / வட்டக்கச்சி ம.வி. கிளி / வன்னேரிக்குளம் ம.வி.
உரிமையாளர் : ஸ்ரீ லிங்கா பொத்தகசாலை (கிளிநொச்சி, விசுவமடு, மாங்குளம், மல்லாவி)
ஸ்ரீ லிங்கா அரிசி ஆலை - திருவையாறு.


யாழ். நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும், வவுனியா திருநாவற்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கிளிநொச்சி 86/3, திருவையாற்றை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (27.01.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (முன்னாள் கிராமசபை உறுப்பினர் - நெடுந்தீவு) - சொர்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலம்மா (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - கிளிநொச்சி மாவட்ட செயலகம்) அவர்களின் பாசமிகு கணவரும், இந்திரலோஜினி, நிஷாமினி, துஷாலினி (ஆசிரியர் மு/ சுதந்திரபுரம் தமிழ் ம.வி.) சியாமா, மோகனவேணி, காண்டீபன் (ஆசிரியர் - வ / ஸ்ரீ நாகராஜா வித்தி. சிதம்பரபுரம், முன்னாள் உறுப்பினர் - வவுனியா நகர சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிதரன், ஞானதேசிகன், தஜிபரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைதுறைப்பற்று), தனராஜி, பத்மகௌரி (ஆசிரியர் - வ / சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் தங்கலட்சுமி, சொர்ணலட்சுமி, லிங்கநாதன், யோகநாதன், காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் பரமேஸ்வரநாதன், ரதிதேவி, கோசலாதேவி, பிள்ளைநாயகம், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் தருமரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிவர்ணன், கனிமொழி, சாதனா, வாசகன், மஞ்சரி, தருண், அக்ஷரா, சஷ்மிகா, பிரமிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரின் இல்லமான கிளிநொச்சி 86/3, திருவையாற்றில் நாளை (30.01.2025) வியாழக்கிழமை நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* 30.01.2025 அன்று கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் காலை 7.00 மணியிலிருந்து அன்னாரின் இல்லத்திற்கான பயண பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



மண்ணில் 01.07.1949 விண்ணில் 27.01.2025

தகவல்:

கிளிநொச்சி,
86/3, திருவையாறு.

சு.கமலம்மா (மனைவி - 076 701 4510)
சு.காண்டீபன் (மகன் - 076 3806990)

(cr.44195) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 13 இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்துமீறிய மீன்பிடிக் குற்றச்சாட்டில் அவர்களைக் கைது செய்வதற்குக் கடற்படையினர் முயன்றுள்ளனர். இதன்போது, கடற்படையினரின் வசமிருந்த துப்பாக்கிகளை இந்திய மீனவர்கள் பறித்தெடுக்க முற்பட்டனர் என்றும், மீனவர்களைக் கைதுசெய்வதற்காக அவர்களின் படகில் ஏறிய கடற்படைச் சிப்பாயுடன் இந்திய மீனவர்கள் தப்பிச்செல்ல முற்பட்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இதையடுத்தே, இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் இரண்டு மீனவர்கள் காயமடைந்த நிலையில், அவர்கள் கடற்படையின் முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்த மீனவர்களை இந்தியத் துணைத்தூதரகத்தின் யாழ்ப்பாணத் தூதுவர் சாய்முரளி பார்வையிட்டுள்ளார்.
(அ-ம-26-125-66)

## நாமலுக்கு...

வதற்காக, இந்திய நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 70 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இந்த வழக்கில் நாமல் ராஜபக்ச ஏற்கனவே சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## துப்பாக்கிச்...

பருத்தித்துறைக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையால் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ள நிலையில், 'கைது நடவடிக்கையை முன்னெடுக்கும்போது இந்திய மீனவர்கள் மூர்க்கமாக நடந்துகொண்டதாலேயே துப்பாக்கி இயங்கியது' என்று கடற்படை தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் ஸ்ரீலங்கா கடற்படை விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
வடக்குக் கடற்பரப்பில் 13 இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொண்டபோது, கடற்படையின் உத்தரவுக்கு மீனவர்கள் கீழ்ப்படியவில்லை. இதனால் குறித்த படகில் சில கடற்படையினர் இறங்கியுள்ளனர். தமது படகுக்குள் கடற்படையினர் ஏறுவதைத் தடுப்பதற்காக, மீனவர்கள் கடும் ஆக்ரோஷமாகவும் ஒழுக்கமின்றியும் நடந்துகொண்டனர்.
கடற்படையினரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில், கடற்படை வீரர் ஒருவரிமிருந்த துப்பாக்கியையும் மீனவர்கள் பறிக்க முயற்சித்துள்ளனர். இதன்போது அந்தத் துப்பாக்கி இயங்கியதாலேயே இரு மீனவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பின்னர் கடற்படையினரால் காயமடைந்த மீனவர்கள் இருவருக்கும் முதலுதவி வழங்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்பரப்பிற்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்துநிறுத்தவும், வடக்கு கடல் பிராந்தியத்தில் கடல் வளத்தின் பாதுகாப்புக்கும், வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக் கடற்படை தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-இ)

## சாவகச்சேரியில்...

சாவகச்சேரி மருத்துவமனையில் பணியாற்றிவந்த சிறுநீரகச் சுத்திகரிப்பு தொடர்பான மருத்துவர் இடமாற்றலாகிச் சென்றுள்ளார். பதில் மருத்துவர் பொறுப்பேற்காத நிலையில் இடமாற்றத்தின் அடிப்படையில் அவரை விடுவிப்பதற்கு மருத்துவமனை நிர்வாகம் மறுப்புத் தெரிவித்திருந்தது. எனினும், அந்த மருத்துவர் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்று மாற்றலாகிச் சென்றுள்ளார். அத்துடன், ஏற்கனவே சில மருத்துவர்களுக்கும் அங்கு பற்றாக்குறை நிலவிய நிலையில் தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் நெருக்கடி நிலை தோற்றம் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த சில மாதங்களுக்கு முன்னர், சாவகச்சேரி மருத்துவமனை தொடர்பில் முன்வைக்கப்பட்ட விரும்பத்தகாத குற்றச்சாட்டுக்கள் காரணமாகவே மருத்துவர்கள் அங்கு பணியில் ஈடுபடுவதற்கு முன்வருவதில்லை என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டிய மூன்று மருத்துவர்கள் இன்னமும் தங்களின் கடமைகளை அங்கு பொறுப்பேற்கவில்லை. ஆதலால், மருத்துவமனையின் கிளினிக் பிரிவிலும், வெளிநோயாளர் பிரிவிலும் கடந்த சில தினங்களாக நோயாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தே சிகிச்சைகளைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மார்ச்...

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
2025ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவை இம்முறை மார்ச் மாதம் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்டப் பதில் செயலாளரின் ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கைக் கடற்படை, நெடுந்தீவுப் பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் இந்தத் திருவிழாவை மேற்கொள்ள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (அ-ம-66)

## உள்ளூராட்சி...

படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய உள்ளூராட்சித் தேர்தலை நடத்திமுடிக்க வேண்டும். அதன்பிறகே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்படும். மாகாணசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அதனை நடத்துவதற்குரிய சூழ்நிலை கடந்த காலங்களில் ஏற்படுத்தப்படவில்லை.
எனவே, பழைய முறைமையில் அந்தத் தேர்தலை நடத்துவதா? அல்லது உள்ளூராட்சித் தேர்தலைப் போல் கலப்பு முறைமையில் நடத்துவதா? என்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்படவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பிறகே அது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.
உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்ட மூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அதனை சபாநாயகர் அறிவித்த பிறகு, சட்டம் நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்துக்குள் தேர்தல் நடத்தப்படும். அதற்கு பொருத்தமான தினத்தை தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும் - என்றார். (அ-ம-44)

## ஆபத்தான...

சேர்க்கப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்து, அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

**யாழ். போதனாவின் அறிக்கை**

மாவை சேனாதிராஜாவுக்கு மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டுள்ளது என்றும், அவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாவை சேனாதிராஜாவின் தலையில் கணிசமான அளவுக்கு குருதிப் பெருக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு மூளையில் ஏற்பட்ட குருதிக் கசிவு காரணமாக ஆபத்தான நிலையில் செயற்கைச் சுவாசக் கருவிகளின் உதவியுடன் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார் - என்றார். (அ-ம-66)

## தமிழக மீனவர்கள்...

தீர்மானித்துள்ளனர். காரைக்கால், ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கங்கள் நேற்று நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## இலங்கைக்...

தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதலையும் துப்பாக்கிச் சூட்டையும் மேற்கொண்டுள்ளது. எந்தச் சூழ்நிலையிலும் இத்தகைய தாக்குதலை ஏற்றுக்கொள்ளமுடியாது. மீனவர்களின் பிரச்சினைகளை அவர்களின் வாழ்வாதாரக் கவலைகளைக் கருத்திற்கொண்டு மனிதாபிமானத்துடன் கையாளவேண்டும். மேலும், மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக தற்போதுள்ள இருதரப்பு ஒப்பந்தங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும் - என்றுள்ளது.
அத்துடன், மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர், இந்திய வெளிவிவகார அமைச்சால் நேரில் அழைக்கப்பட்டு அவரிடம் இந்தியாவின் அதிருப்தியும், கண்டனமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக உறவு விரிசல் ஏற்பட்டு வருவதாகக் கருதப்படும் நிலையில், இந்தச் சம்பவம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் மிகப்பெரும் பகையைத் தோற்றுவிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-இ)

## யாழ்...

உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது யாழ். பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் அமைச்சால் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. விரைவில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே, அமைச்சு உரியவகையில் தலையீடு செய்யும். அனைத்து பல்கலைக்கழக கட்டமைப்பிலும் கல்வி நடவடிக்கை தடையின்றித் தொடரவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். எனவே, தடையாக உள்ள காரணிகளுக்கு தீர்வு வழங்கப்படும்.
அதேபோல வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குவதற்கு முன்னர் அமைச்சுடன் பேச்சு நடத்தவேண்டும். அதில் தீர்வு இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கலாம். அதுதான் பொருத்தமாகவும் இருக்கும் - என்றார். (அ-ம-44)

## முன்னாள்...

சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:-
முன்னாள் ஜனாதிபதிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஆடம்பர வீடுகளைக் கையளித்துவிட்டு வெளியேறுமாறு, நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் வைத்து அறிவித்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பாரியார் ஹேமா பிரேமதாஸ வீட்டை ஒப்படைத்துவிட்டார். கோத்தபாய ராஜபக்சவும் கையளித்துவிட்டார். ரணில் விக்கிரமசிங்க வீட்டைப் பயன்படுத்தவேயில்லை.
மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரே தற்போதும் அரச வீடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுக்குப் பிரத்தியேகச் சட்டம் தேவையில்லை. வெளியேறுமாறு கௌரவமாகக் கூறிவிட்டோம். அவ்வாறு செய்வார்கள் என நம்புகின்றோம்.
அரசாங்க வீட்டில் இருந்துகொண்டே எழுத்துமூலம் அறிவிக்குமாறு கோருகின்றனர். முன்னாள் ஜனாதிபதிகள் அவர்கள் வகித்த பதவிநிலையைக் கருதிக் கௌரவமாக வெளியேறவேண்டும். அதைவிடுத்து அந்த மாளிகைகளில் தொங்கிக்கொண்டிருந்தால் அவர்களை விரட்ட மாற்றுவழிகளும் உள்ளன - என்றார்.
(அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியில்

# துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற பச்சைகுத்தும் நிலையம் மூடல்

யாழ்ப்பாணம், ஜன. 29

சுகாதாரத்துக்குத் தீங்கான முறையில் பச்சை குத்தியமை மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்காக வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட பச்சை குத்தும் நிலையம் ஒன்று மூடப்பட்டுள்ளது.

குறித்த வியாபார நிலையத்தில், சுகாதாரத்துக்குத் தீங்கான வகையில் பச்சை குத்தும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையும், துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டதால் மறு அறிவித்தல் வரை வியாபார நிலையம் மூடப்படுகின்றது என்று வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார். (ம-26-125)

# இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் பிரிட்டன்

யாழ்ப்பாணம், ஜன. 29

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதில் மனம் இல்லாத இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை பிரிட்டன் உறுதிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கான பிரிட்டனின் அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிட்டன் அமைச்சருடனான சந்திப்பில், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினோம். 'தமிழ் மக்களுக்கென ஒரு பிரச்சினை இல்லை' என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடு ஆகும். தேசிய மக்கள் சக்தியின் அண்மைக்கால நடவடிக்கைகளும் அவ்வாறான மனோநிலையிலேயே அமைந்துள்ளன.

வடக்கு கிழக்கில் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு பொறுப்புகூறல் என்ற விடயம் முக்கியமானதாக கருதப்படுகிறது. அதே போன்று பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் பொறுப்புக்கூறலை மிகவும் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக எந்த அக்கறையும் இல்லாமல் இருக்கின்றது என்பதை பிரிட்டன் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினோம் - என்றார். (ம125)

# பொய் வாக்குறுதிகளாலேயே ஆட்சியைப் பிடித்தவர் அநுர

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 29

ஜனாதிபதி அநுர தரப்பினர் பொய்யுரைத்தே ஆட்சிக்கு வந்தனர். ஆதலால், அவர்கள் மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-

போரை முடிவுக்கு கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ச தொடர்பில் மக்கள் மத்தியில் குரோதத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்துவரு கின்றது. அதனால் அவர் பயன்படுத்திய வீடு தொடர்பில் போலியான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

மஹிந்தவை நேசித்த மக்களின் மனங்களில், அவர் தொடர்பில் அதிருப்தியை உருவாக்குவதற்குரிய செயற்பாடே திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுவருகின் றது. தேசிய மக்கள் சக்தி, மக்கள் மத்தியில் பொய்யுரைத்து, பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே ஆட்சிக்கு வந்துள்ளது.

அதாவது சட்டத்துக்கு புறம்பாகவே ஆணை பெறப்பட்டுள்ளது. தம்மால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாததால் பிரச்சினையை திசைதிருப்புவதற்கு மஹிந்த ராஜபக்ச இலக்கு வைக்கப்பட்டுள்ளார். எனவே, பொய்யுரைத்தமைக்காக நாட்டு மக்களிடம் தேசிய மக்கள் சக்தியினர் மன்னிப்புக்கோர வேண்டும். வெளிநாடுகளில் பணம் பதுக்கப்பட்டிருந்தால் பணத்தை கொண்டுவாருங்கள். சட்ட நடவடிக்கை எடுங்கள். அதைவிடுத்து மஹிந்தவை பழிவாங்க முற்பட வேண்டாம்' - என்றார். (அ-ம-44)

**வீடு வாடகைக்கு தேவை**

பிறவுண் வீதி, நல்லூருக்கு அண்மையாக, திருநெல்வேலி பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இருப்பது

தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

**077 770 8125**

**விற்பனைக்கு**

ஊர்க் கோழி விற்பனைக்கு (முட்டைக்கோழி)

தொடர்புகளுக்கு:

**077 616 2014**

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு, Champion Lane - நந்தாவிலில் புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.

- 2, 3/4 பரப்பு
- 4 அறைகள், 2 குளியலறைகள்
- சுற்றுமதில்
- காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர்
- கட்டுக் கிணறும் உண்டு.

(CS/57285) J-1

தொடர்பு:- **076 620 7597**



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மன்னார் நகரக்கிளையின் ஏற்பாட்டில் இனங்களுக்கிடையே சகவாழ்வைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டம் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அஸீம் (அத்லி) தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ச-214)

**பெண் பராமரிப்பாளர் தேவை**

யாழ் மாவட்டத்தில் வசிக்கும் அம்மா ஒருவரைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள பெண் பராமரிப்பாளர் உடன் தேவை. சம்பளம் பேசி நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஆர்வம் உடையவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

(CS/57351) J-1

தொடர்புகளுக்கு:- Whats app **077 009 5706**

## கேத்ரின்...

யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்குச் சென்ற பிரிட்டன் அமைச்சரை நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகிய இருவரும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அத்துடன், யாழ்ப்பாண சிவில் அமைப்புக்களின் தலைவர்களையும் அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கைக்கான பிரிட்டனின் தூதுவர் அன்ரூ பற்றிக்கும் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைக்குச் சரியான வகையில் இதுவரை எந்தவொரு தரப்பினரும் தீர்வைத் தரவில்லை. வடக்கின் ஆளுநரிடமும் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்திருந்தும் அவரும் எங்களின் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளவில்லை என்றே நாம் கருதுகின்றோம்.

வேலையற்ற பட்டதாரிகள் என்ற வகைக்குள் கலைத்துறையில் பட்டங்களைப் பெற்றவர்களே முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைக்கு நாட்டின் கல்வி கட்டமைப்பே காரணமாக இருக்கின்றது. நாட்டின் கல்வித் திட்டத்தின் ஊடாக முறையான தகுதி மற்றும் திறனை நாம் கொண்டிருக்கின்றோம். எமக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லையெனில் அதற்கு முழுப்பொறுப்பும் இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கத்தையே சாரும்.

வடமாகாணத்தில் தற்போது பல்வேறுபட்ட திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வெற்றிடம் காணப்படுகின்றது. அந்த வெற்றிடங்களுக்குரிய வாய்ப்புக்கள் எமக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம். இதன் தொடர்ச்சியாக நாங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு வரவுள்ள நிலையில், அவருக்கு எங்களின் எதிர்ப்பையும் நிலையையும் வெளிப்படுத்தும் விதமாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றனர். (அ-ம-26-125-66-20)

**மணமகள் தேவை**

1995 இல் பிறந்த (Textile Industries) Executive Officer மணமகனுக்கு மணமகள் தேவை.

நட்சத்திரம் - ரோகினி,

பொருத்தமான நட்சத்திரம் - அச்சுவினி, மிருகசீரிடம் 1, 2, சித்திரை 1, 2 (கன்னிராசி), அனுசம்.

செவ்வாய் இருக்கக்கூடிய இடம் - 3, 5, 6, 10, 11

கௌரவ குடும்பம் (V), விஸ்வகுலம்.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த உத்தியோக மணப்பெண் எதிர்பார்க்கின்றோம்.

(CS/2389) J-1

**077 693 3004, 075 474 0608**

**Group and Personal Classes English**

**By: C.S.K. Mayuran**

தரம் 06 முதல் O/L வரையான

**வகுப்புக்கள் ஆரம்பம்**

நேரம்:- 31.01.2025 - வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு

இடம்:- பரஞ்சோதி பாடசாலை அருகில் கோண்டாவில் வடக்கு.

(CS/57346) J-1

தொடர்புகளுக்கு- **077 193 0298**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org